செ.வெ.எண்: 64 நாள்: 25.01.2017

**மகளிர் சுயஉதவிக் குழுக்களின் விற்பனை அங்காடியில் பொது மக்கள் அனைவரும் பொருட்களை குறைந்த விலையில் பெற்ற பயனடைய வேண்டும் - மாண்புமிகு மக்கள் நல்வாழ்வு மற்றும் குடும்பநலத்துறை அமைச்சர் டாக்டர்.சி.விஜயபாஸ்கர் அவர்கள் தகவல்**

புதுக்கோட்டை மாவட்டம், விராலிமலையில் மகளிர் திட்டம் சார்பில் கியாஸ்க் விற்பனை அங்காடியினை மாவட்ட ஆட்சித்தலைவர் திரு.சு.கணேஷ்,இ.ஆ.ப., அவர்கள் தலைமையில், மாண்புமிகு மக்கள் நல்வாழ்வு மற்றும் குடும்பநலத்துறை அமைச்சர் டாக்டர்.சி.விஜயபாஸ்கர் அவர்கள் திறந்து வைத்தார்.

இந்த கியாஸ்க் விற்பனை அங்காடியினை மாண்புமிகு மக்கள் நல்வாழ்வு மற்றும் குடும்பநலத்துறை அமைச்சர் அவர்கள் திறந்து வைத்து கூறியதாவது.

தமிழக அரசு மகளிர் திட்டம் சார்பில் பல்வேறு திட்டங்களை அறிமுகப்படுத்தி செயல்படுத்தி வருகிறது. இதன்படி மகளிர் சுயஉதவிக் குழுக்களின் உற்பத்தி பொருட்களை விற்பனை செய்யும் வகையில் புதிய விற்பனை அங்காடிகளை துவக்க தமிழ அரசு உத்தரவிட்டுள்ளது. அதனடிப்படையில் நமது மாவட்டத்தில் விராலிமலையில் ரூ.3.50 லட்சம் மதிப்பீட்டில் கட்டப்பட்ட மகளிர் சுயஉதவிக் குழுக்கள் தயாரிப்புகளின் வணிக மையம் திறந்து வைக்கப்பட்டுள்ளது.

இந்த கியாஸ்க் விற்பனை அங்காடியில் மகளிர் சுயஉதவிக் குழுக்கள் உற்பத்தி செய்த ஊறுகாய், நவதானியங்கள், கைவினைப் பொருட்கள், வீட்டு அலங்காரப் பொருட்கள், சேலைகள், சட்டைகள் உள்ளிட்ட பல்வேறு பொருட்கள் தரமாகவும், நியாயமான விலையிலும் வைக்கப்பட்டுள்ளது. மேலும் நமது மாவட்டத்தில் புதுக்கோட்டை உழவர்சந்தை மற்றும் சித்தன்னவாசல் ஆகிய இடங்களில் மகளிர் சுயஉதவிக் குழுக்களின் விற்பனை அங்காடி சிறப்பாக செயல்பட்டு வருகிறது. எனவே அனைத்து பொது மக்களும் தங்களுக்கு தேவையான பொருட்களை இந்த விற்பனை அங்காடியில் வாங்கி பயன்பெறுவதுடன் மகளிர் சுயஉதவிக் குழுக்களின் வருமானம் பெருகி அவர்கள் வாழ்வில் வளம்பெற ஒத்துழைப்பு நல்க வேண்டும் என்றும் மாண்புமிகு மக்கள் நல்வாழ்வு மற்றும் குடும்ப நலத்துறை அமைச்சர் டாக்டர்.சி.விஜயபாஸ்கர் அவர்கள் கூறினார்.

இந்நிகழ்ச்சியில் திட்ட இயக்குநர் திரு.சந்தோஷ்குமார் (மா.ஊ.வ.மு), மாவட்ட திட்ட மேலாளர் திருமதி.வசுமதி (புதுவாழ்வு திட்டம்), முன்னாள் ஒன்றியக் குழுத் தலைவர் திரு.சுப்பையா, ஒன்றியக் குழுத் துணைத் தலைவர் திரு.திருமூர்த்தி, ஆத்மாக் குழுத் தலைவர் திரு.பழனியாண்டி,கூட்டுறவு சங்கத்தலைவர்கள், முன்னாள் உள்ளாட்சி அமைப்பின் பிரதிநிதிகள் மற்றும் அரசு அலுவலர்கள் உள்ளிட்ட பலர் உடனிருந்தனர்.

**செய்தி வெளியீடு: செய்தி மக்கள் தொடர்பு அலுவலர், புதுக்கோட்டை.**